# இரண்டு உடன்படிக்கைகள்

ஒவன் டி. ஆல்பிரைட்

> *முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்த தினிமித்தம் மாற்றப்பட்டது. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம் (எபி. 7:18, 19).*

பழைய உடன்படிக்கை மற்றும் புதிய உடன்படிக்கை ஆகியவற்றை ஒப்பிடுவதற்குப் பவுல் தெளிவான ஒரு விவரிப்பைப் பயன்படுத்தி அவைகளைப் பற்றி பின்வருமாறு எழுதினார்:

> *நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள். ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையான வளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன். அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான், சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான். இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய் மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளை பெறுகிறது, அது ஆகார் என்பவள்தானே. ஆகார் என்பது அரபி தேசத்திலுள்ள சீனாய் மலை; அந்த ஆகார் இப்பொழுதிருக்கிற எருசலேமுக்குச் சரி; இவள் தன் பிள்ளைகளோடே கூட அடிமைப்பட்டிருக்கிறாளே. மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள் (கலா. 4:21-26).*

ஆகாரினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட உடன்படிக்கை பழைய உடன்படிக்கையாக உள்ளது என்பது தெளிவு. இஸ்ரவேலர்களுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அடிமைப் பெண்ணின் பிள்ளைகளாய் இருப்பதற்கு மாறாக, கிறிஸ்தவர்கள் புதிய உடன்படிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சாராள் என்ற சுயாதீனமுள்ள பெண்ணின் பிள்ளைகளாய் உள்ளனர் (கலா. 4:31). அடிமைப் பெண்ணின் பிள்ளைகள் சுயாதீனமுள்ள பெண்ணின் பிள்ளைகளுடன் சுதந்தரவாளிகளாய் இருப்பதில்லை (கலா. 4:30). அடிமைகள் அல்ல ஆனால் மகன்களே சுதந்தரவாளிகளாய் இருப்பார்கள் (கலா. 4:7).

முதலாம் உடன்படிக்கையானது இஸ்ரவேலின் புத்திரர்களுடன்

இருந்தது (யாத். 34:27, 28). புது உடன்படிக்கையின் கீழ் சுதந்தரவாளிகளானவர்கள் தேவனுடைய புத்திரர்களாய் உள்ளனர், இவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுள்ளவர்களாவார்கள் (கலா. 3:26, 27). முதலாம் உடன்படிக்கையின் கீழ் உள்ளவர்கள், சுயாதீனமான பெண்ணின் அதாவது கிறிஸ்துவின் உடன்படிக்கையின் கீழ் இருக்கின்ற பிள்ளைகளுடன் சுதந்திரம் பெறுவதில்லை. முதலாம் உடன்படிக்கையின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டுள்ள கிறிஸ்தவர்கள் மீண்டும் அடிமைத்தனத்தின் நுகத்திற்குக் கீழ்ப்படுவதில்லை. கிறிஸ்து நம்மை விடுதலையாக்கியுள்ளார் (கலா. 5:1).

கற்பலகைகளில் எழுதப்பட்ட பத்துக்கட்டளையைப் பார்க்கிலும் அதிக மகிமையுள்ள உடன்படிக்கையான புதிய உடன்படிக்கைக்கு (2 கொரி. 3:6) அப்போஸ்தலர்கள் ஊழியர்களாய் உள்ளனர். முதலாம் உடன்படிக்கையானது மரணத்திற்கும் ஆக்கினைத் தீர்ப்புக்கும் ஊழியம் செய்தது (2 கொரி. 3:7-9). அந்த உடன்படிக்கையைத் தேவனுடைய மகிமையுள்ள பிரசன்னத்தில் பெற்றுக் கொண்ட பிறகு, மோசே தமது முகத்தின் ஒளியை இஸ்ரவேலர்கள் காண முடியாதபடி ஒரு முக்காட்டை அணிந்து கொள்ள வேண்டியிருந்தது (2 கொரி. 3:7-13; யாத். 34:27-33).

கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் (நிருபத்தை) எழுதிய வேளையில், புதிய உடன்படிக்கையின் மகிமையைப் பெற்றிராத (2 கொரி. 3:9, 10) கற்பலகையில் எழுதப்பட்ட அந்த உடன்படிக்கையானது இனியும் நிலைத்திருப்பதாக இல்லாதிருந்தது. “அன்றியும் ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்ததானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே” (2 கொரி. 3:11). அவரை ஊழியக்காரராகக் கொண்டிருந்த புதிய உடன்படிக்கையானது இன்னும் நிலைத்துள்ளது, ஆனால் கற்பலகைகளில் எழுதப்பட்ட உடன்படிக்கையானது ஒழிந்து போயுள்ளது.

இஸ்ரவேலர்களுக்குத் தேவன் கொடுத்திருந்த நியாயப்பிரமாணமானது அதன் நோக்கத்தைச் செய்திருந்தது, மற்றும் இயேசு கிறிஸ்துவின் புது உடன்படிக்கையைக் கொண்டு வந்ததில் அந்தப் பழைய பிரமாணம் முடிந்து போயிற்று. இப்பொழுது, இயேசுவின் மரணம் மற்றும் இரத்தத்தினால் புதிய உடன்படிக்கையானது அர்ப்பணிக்கப்பட்டுள்ளதால், இஸ்ரவேலர்களுக்குத் தேவன் கொடுத்திருந்த உடன்படிக்கையின் கீழ் நாம், இனி இருப்பதில்லை. நியாயப்பிரமாணமும், பழைய உடன்படிக்கையும் தங்களின் நோக்கத்தை நிறைவேற்றி, தாங்கள் முன்னிழலிட்டுக் காண்பித்த இயேசுவின் மகிமையுள்ள உடன்படிக்கையானது தனது எல்லா மகிமையிலும் ஒளி வீசும்படியாக முடிந்து போயின.